**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2463/ஆ2/2024, நாள்.08.08.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – "தமிழ்புதல்வன்" திட்டத் துவக்கவிழா நிகழ்ச்சிகளை அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ / மாணவிகள் காண செய்தல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.052905/எம்2/எஸ்3/2024, நாள். 07.08.2024

•••••

பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க அரசு / அரசு நிதியுதிவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்ற மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திட "தமிழ்புதல்வன்" எனும் மாபெரும் திட்டம் இந்த நிதியாண்டு முதல் அமுல்படுத்திடும் வகையில் 09.08.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை துவக்கி வைக்க உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, 09.08.2024 அன்று கோயம்புத்தூரில் நடைபெறும் "தமிழ்புதல்வன்" திட்ட துவக்க விழா நிகழ்ச்சியை தங்கள் பள்ளிகளில் உள்ள Hi-tech Lab மூலம் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களும் காலை 11.15 மணிக்கு நிகழ்ச்சியை காணும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதிவி பெறும் மேல்நிலைப் பள்ளி தமைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் "தமிழ்புதல்வன்" துவக்க நிகழ்ச்சி கண்டநிகழ்வினை (புகைப்படம்) தலைமையாசிரியர் Whatsapp group பகிருமாறும் மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Form-ல் பள்ளியின் விவரம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்ற எண்ணிக்கை விவரத்தினை பதிவிடுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதிவி பெறும் மேல்நிலைப் பள்ளி தமைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியினை பார்வையிடுவதற்கான இணையதள Link பெறப்பட்டவுடன் தலைமையாசிரியர் Whatsapp group-ல் பகிரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – Google Form Link

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSemdLse87PTjw45StvRWR-hYBBr6KDCsU_TQtqOlpu9yKjkUA/viewform

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–
வேலூர் மாவட்ட கல்வி அலுவலர்கள்
(இடைநிலைக் கல்வி )
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)